OS 116-2024 (Old OS 223/2022)
Date: 13.11.2025
PW-1 நாகராஜ், த/பெ. கோவிந்தன்.

**குறுக்குவிசாரணை**

பிரதிவாதி வெங்கடேசன் எனக்கு எப்படி பழக்கம் என்றால் நான் 2017-2018ம் ஆண்டு செமி மங்களம் என்ற ஊரில் நான் அவருடைய நெல்லை வாங்கி நெல் வியாபாரம் செய்த போது அவருடன் எனக்கு பழக்கம் ஏற்பட்டது. நான் என்ன பரிகாரம் இந்த வழக்கில் கேட்டுள்ளேன் என்றால் பிரதிவாதி என்னிடம் கடனாக பணம் வாங்கினார் அதனால் அந்த கடன் தொகையை திருப்பித்தர இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வெங்கடேசன் என்னிடம் நெல் ஏதேனும் என்னிடம் விற்றதன் மூலம் எங்களுக்குள் பழக்கம் ஏற்பட்டதா என்றால் வெங்கடேசன் அவரது ஊரில் உள்ள வாடிக்கையாளர்களை எனக்கு பிடித்துகொடுப்பார் அதன் மூலம் எனக்கும் அவருககும் பழக்கம் ஏற்பட்டது. மேற்படி பிரதிவாதிக்கும் எனக்கும் மோதல் போக்கு ஏதேனும் இருந்ததா என்றால் சுமூகமான உறவு தான் எங்கள் இருவருக்குள்ளும் இருந்தது. நான் கைமாற்றாக ஏதேனும் பிரதிவாதிக்கு கொடுத்து வாங்கும் பரிமாற்றம் ஏதேனும் உள்ளதா என்றால் அவ்வாறு எந்தவொரு பரிமாற்றமும் எங்களிடம் இல்லை. பிரதிவாதியும் ஒரு விவசாயி என்றால் சரிதான். என்னிடம் இந்த வழக்கு கடன் தொகையை எப்போது என்னிடம் கேட்டார் என்றால் 2020ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ம் தேதி எங்கள் வீட்டிற்கு வந்து என்னிடம் கேட்டார். அவர் கடனை என்னிடம் கேட்டபோது தருவேன் என்று சொன்னேனா அல்லது தரமாட்டேன் என்று சொன்னேனா என்றால் தருகிறேன் என்றுதான் சொன்னேன். மேற்படி பணத்தைக்கொடுப்பதற்கு நான் பிரதிவாதியிடம் என்ன கேட்டேன் என்றால் பாண்டு எழுதிக்கொடு பணம் தருகிறேன் என்று சொன்னேன். அதாவது நிரப்பப்படாத கடனுறுதிச்

சீட்டினை யார் கொண்டுவந்தது என்றால் பிரதிவாதிதான் கொண்டுவந்தார். கடனுறுதிச் சீட்டினை யார் நிரப்பியது என்றால் ஜெகதீசன் என்பவர் தான் நிரப்பினார். அன்றைய தினம் யார் யார் இருந்தது என்றால் ஜெகதீசனும், பாரதிதாசன் என்பவர்களும் இருந்தார்கள். மேற்படி வெங்கடேசன் மேற்சொன்ன 15ம் தேதியே பணத்தைக் கேட்டாரா அல்லது அதற்கு முன் தினங்களிலும் என்னிடம் பணம் கேட்டிருந்தாரா என்றால் 15ம் தேதியே எனது வீட்டிற்கு வந்து அவசரமாக பணம் தேவைப்படுகிறது என்று கேட்டார். எந்த தேவைக்கா பிரதிவாதி என்னிடம் பணத்தைக் கேட்டார் என்றால் குடும்ப செலவு தேவைக்காக என்னிடம் பணம் கேட்டார். ஜெகதீசன், பாரதிதாசன் இருவரும் எனக்கு தெரிந்த சொந்தக்காரர்களா அல்லது வெளியூர்காரர்களா என்றால் மேற்படி இருவருமே வெளியூர்காரர்கள் தான் ஆனால் எனது நண்பர்கள் ஆவார்கள். அன்றைய 15ம் தேதி ஜெகதீசன், பாரதிதாசன் இருவரும் எதற்காக எனது வீட்டிற்கு வந்தார்கள் என்றால் அவர்கள் எனது நண்பர்கள் அதனால் அடிக்கடி எனது வீட்டிற்கு வருவார்கள் அவ்வாறே அன்றைய தினமும் வந்தார்கள். யார் கடனுறுதிச் சீட்டை நிரப்பியது என்றால் ஜெகதீசன் நிரப்பினார். இந்த வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் யார் யார் சாட்சிகள் என்றால் பாரதிதாசன் சாட்சியாகவும், ஜெகதீசன் கடனுறுதிச் சீட்டினை எழுதியவராகவும் கையொப்பம் செய்தார். கடனுறுதிச் சீட்டில் முதன் முதலில் யார் கையொப்பம் செய்தார் என்றால் பிரதிவாதி கையொப்பம் செய்தார் அதன் பின்னர் கடனுறுதிச் சீட்டினை எழுதியவர் கையொப்பம் செய்தார் அதன்பின்னர் சாட்சி கையொப்பம் செய்தார். கடனுறுதிச் சீட்டில் உள்ள விவரங்கள் அனைத்தும் யார் சொல்லி எழுதப்பட்டது என்றால் பிரதிவாதி சொல்லித்தான் எழுதப்பட்டது. பிரதிவாதி ஆங்கிலத்தில் கையொப்பம் செய்வாரா அல்லது தமிழில் கையொப்பம் செய்வாரா என்றால்

ஆங்கிலத்தில்தான் கையொப்பம் செய்வார். மேற்படி கடனுறுதிச்சீட்டினை எழுதிக்கொடுக்கும்போது பிரதிவாதியின் தகப்பனார் யார் என்று என்னிடம் சொன்னாரா என்றால் சொன்னார் அவரது அப்பா சின்னப்பையன் என்று சொன்னார். பிரதிவாதி வழக்கு கடனுறுதிச்சீட்டினை எனக்கு ஏற்படுத்திக்கொடுக்கவில்லை என்று சொன்னார் என்றால் சரியல்ல. மேற்படி பிரதிவாதியின் அப்பா பெயர் கோவிந்தன் ஆகும் நான் தான் மோசடித்தனமாக அவரது அப்பாவின் பெயர் சின்னப்பையன் என்று கடனுறுதிச்சீட்டினை புனைந்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி அவரது அப்பாவின் பெயரை எந்த காலத்திலும் தவறாக சொன்னதில்லை நான் தான் வேண்டும் என்றே எழுதிக்கொண்டேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னுடன் நெல் மூட்டைகளை விற்பதையும் நான் அவரிடம் வாங்குவதையும் பிரதிவாதி நிறுத்திக்கொண்டதாலும் மேலும் பிரதிவாதி வேறொரு நபரான காஞ்சிபுரத்தைச் சேர்ந்த தட்சணாமூர்த்தி என்பவருடன் அவர் நெல் மூட்டைகளை விற்று வர்த்தகம் செய்துவந்ததால் அந்த காழ்ப்புணர்ச்சியில் பிரதிவாதியின் கையெழுத்து மேற்படி கடனுறுதிச் சீட்டில் மோசடியா போட்டு ஒரு பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி பிரதிவாதி எந்த காலத்திலும் அவருடைய கையெழுத்தை ஆங்கிலத்தில் போட்டதில்லை தமிழில்தான் போடுவார் என்றால் சரியல்ல. மேற்படி பிரதிவாதியின் கையெழுத்து சம்மந்தப்பட்ட அனைத்து ஆவணங்களையும் பிரதிவாதியின் விசாரணையில் பிரதிவாதி தாக்கல் செய்வார் என்றால் சரியல்ல. நான் மேற்படி பணத்தை செக் மூலமாக கொடுத்தேனா அல்லது ரொக்கமாக கொடுத்தேனா என்றால் ரொக்கமாகத்தான் கொடுத்தேன். நானும், ஜெகதீசனும், பாரதிதாசன் ஆகியோர் ஒன்றாகச் சேர்ந்துதான் வழக்கு கடனுறுதிச்சீட்டினை புனைந்துள்ளோம் என்றால் சரியல்ல. நான்

சொல்வதுபோல் நான் கொடுத்த கடனை என்றாவது சென்று பிரதிவாதியிடம் கேட்டேனா என்றால் 20 முறைக்கு மேல் கேட்டுள்ளேன். நான் மேற்படி கடனை கொடுக்க வேண்டும் என்று ஏதேனும் அறிவிப்பு அனுப்பியுள்ளேனா என்றால் 2022ம் ஆண்டு 8வது மாதம் அனுப்பியுள்ளேன் தேதி ஞாபகம் இல்லை. நான் அனுப்பிய அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு ஏதேனும் அனுப்பினாரா என்றால் இல்லை. வாதி ஆகிய நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிலும் தகப்பனார் பெயர் சின்னப்பையன் என்று தான் உள்ளது என்றால் சரிதான். அவருடைய அப்பாவின் பெயர் சரியான பெயராக இருந்திருந்தால் அவர் பதில் அறிவிப்பு அனுப்பியிருப்பார் என்றால் பிரதிவாதியின் அப்பா பெயர் சின்னப்பையன் என்றுதான் சொன்னார் அதனால்தான் அந்தபெயரைப் போட்டு அறிவிப்பு அனுப்பினேன். உண்மையிலேயே நான் சொல்வதுபோல் பிரதிவாதி கடன் கேட்டு நான் கடனைக் கொடுத்து அதற்கு ஈடாக கடனுறுதிச் சீட்டு பிரதிவாதி எழுதிக்கொடுத்திருந்தால் நான் சரியான பிரதிவாதியின் தகப்பனாரின் பெயரினைப் போட்டு அனுப்பியிருப்பேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் எந்தவொரு கடனும் பெறவில்லை கடனுறுதிச்சீட்டும் எழுதிக்கொடுக்கப்படவில்லை எனவே இந்த வழக்கினை தள்ளுபடி செய்யவேண்டும் என்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/– M.C. Arun
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்